# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

## வரலாறு

சுட்டெண் ..................................................

தரம்: 9

நேரம் - 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. இலங்கை முழுவதையும் ஆட்சிபுரிந்த ஐரோப்பிய இனத்தவர்
   1. போர்த்துக்கேயர் 2. பிரான்சியர் 3. பிரித்தானியர் 4. ஒல்லாந்தர்

2. இலங்கையில் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்பியவர்
   1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர் 3. ஆங்கிலேயர் 4. பிரான்சியர்

3. இலங்கையில் சமய கல்வி மூலம் கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட அமைப்பு
   1. மத குருக்கள் 2. மத ஆலயங்கள் 3. திருச்சபைகள் 4. மிசனரிகள்

4. இலங்கையில் போயா தினத்தை விடுமுறை நாளாக்குவதில் முன்னோடியாக திகழ்ந்தவர்
   1. அநாகரிக தர்மபாலா 2. மிக்கேட்டுவ குணானந்த தேரர்
   3. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் 4. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

5. இலங்கையில் இறப்பர் முதல் முதலில் பயிரிடப்பட்ட இடம்
   1. லூல்கந்தர 2. கியூ பூங்கா 3. கண்ணொருவ 4. ஹெனரத்கொட பூங்கா

6. ஸ்ரீ விஜய இராஜசிங்கனுக்குப் பின் ஆட்சிபீடம் ஏறியவன்
   1. 2ம் விமலதர்மசூரியன் 2. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
   3. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் 4. ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்

7. இலங்கையில் மக்கலம் அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக சட்டவாக்கக் கழகத்திற்கு தெரிவான முதலாவது இலங்கையர்
   1. சேர்.பொன்.அருணாச்சலம் 2. டி.பி.ஜாயா
   3. சேர்.பொன்.இராமநாதன் 4. எம்.சி.சித்திலெப்பை

8. 1798 - 1802 வரை இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை
   1. இரட்டை ஆட்சி 2. கம்பனி ஆட்சி 3. முடிக்குரிய ஆட்சி 4. சென்னைஆட்சி

9. ஒல்லாந்தர் நீதிமன்றத் தொகுதியின்கீழ் நிலை நீதிமன்றமாக அமைவது
   1. லான்ராத் 2. சிவில்ராத் 3. ராத்வான் ஜஸ்டிட் 4. பிஸ்கால் நீதிமன்றம்

10. 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புபட்ட தலைவர்
    1. கொங்காலே கொட பண்டா 2. டிங்கிரால 3. புரன் அப்பு 4. மடுகல்லே திசாவ

11. 1848ம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான உடனடிக்காரணம்
   1. கிராமிய விவசாயம் வீழ்ச்சியடைந்தமை
   2. அரசுக்கும் மக்களுக்குமிடையில் தொடர்பு குறைந்தமை
   3. ஆளுனர் டொரிங்டனின் புதிய வரிக்கொள்கை
   4. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைமீது பிரித்தானியர் அதிக கவனம் செலுத்தியமை

12. சிப்பாய்க் கலகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
   1. 1851   2. 1854   3. 1857   4. 1859

13. ஸ்ரீ சுமணதிஸ்ஸ தேரரால் காலியில் அமைக்கப்பட்ட முதலாவது அச்சகம்
   1. லக்மினி பஹன   2. லங்கோபகார   3. சரசவி சந்தரெச   4. சிங்களஜாதிய

14. "உதயபானு" எனும் பத்திரிகையை ஆரம்பித்தவர்
   1. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்   2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
   3. சேர்.பொன்னம்பலம் அருணாச்சலம்   4. சேர்.பொன்னம்பலம் இராமநாதன்

15. குயினைன் எனும் மருந்து தயாரிக்கப் பயன்பட்ட பயிர்
   1. கோப்பி   2. கராம்பு   3. சிங்கோனா   4. கொக்கோ

16. இலங்கையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தை அமைத்த ஆளுனர்
   1. ஹென்றி மக்கலம்   2. எட்வேட் பாண்ஸ்   3. வெஸ்ட்றிஜ்வே   4. ஆதர்ஹவலொக்

17. 1840ம் ஆண்டு ஸ்ருவட் மெக்கன்சியால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம்
   1. மார்ஷல்லோ சட்டம்   2. மீயூரன் சட்டம்
   3. தரிசுநில காணிச்சட்டம்   4. பாழ்நிலக் கொள்கை அழிப்புச்சட்டம்

18. இந்திய தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர்
   1. தாதாபாய் நவ்ரோஜி   2. W.C.பெனர்ஜி
   3. பாலகங்காதர திலகர்   4. ஜவகர்லால் நேரு

19. முகலாய பேரரசுக்கான அத்திவாரத்தை ஏற்படுத்திய அரசன்
   1. சாஜகான்   2. ஜஹாங்கீர்   3. பாபர்   4. மகா அக்பர்

20. பௌத்தமத வளர்ச்சிக்காக பஞ்ச விவாதங்கள் நடத்தப்பட்ட இடங்கள் **அ** பகுதியிலும் நிகழ்ந்த ஆண்டுகள் **ஆ** பகுதியிலும் தரப்பட்டுள்ளன. அவற்றை தொடர்புபடுத்தி சரியான விடைத்தொகுதியை தெரிவுசெய்க.

| **அ** | **ஆ** |
|---|---|
| பத்தேகம | A - 1873 |
| பாணந்துறை | B - 1871 |
| உதம்விட | C - 1866 |
| கம்பளை | D - 1865 |

   1. BCDA   2. BADC   3. CDBA   4. DACB

(20x2 =40 புள்ளி)


## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. தரப்பட்ட விடயங்களுக்குப் பொருத்தமான இடங்களை இலங்கை புறவுருவப் படத்தில் குறித்துக் காட்டப்பட்ட ஆங்கில எழுத்துக்களில் இருந்து தெரிவு செய்க.

1. இலங்கையின் இயற்கை துறைமுகம் அமைந்துள்ள இடத்தைக் காட்டும் ஆங்கில எழுத்து
2. பிரித்தானியர் இறுதியாக கைப்பற்றிய இராசதானியின் அமைவிடத்தைக் காட்டும் ஆங்கில எழுத்து
3. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள பண்டைய துறைமுகத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து
4. 1602ம் ஆண்டு ஜோரிஸ்வான்ஸ்பில் பேர்ஜன் என்னும் ஒல்லாந்து தளபதி மூன்று கப்பல்களுடன் வந்திறங்கிய இடத்தைக் காட்டும் ஆங்கில எழுத்து
5. மாணிக்க கங்கையை குறித்துக் காட்டும் ஆங்கில எழுத்து
6. ஐம்பெரும் விவாதங்களுள் 1873ம் ஆண்டுக்குரிய விவாதம் நடைபெற்ற இடத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து

(6x2=12 புள்ளி)



02. 1. இலங்கையை தமது ஆளுகைக்கு உட்படுத்திய ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரைக் குறிப்பிடுக.
2. கண்டி மன்னனை சந்தித்த ஒல்லாந்து தூதுவர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.
3. 1638ம் ஆண்டு கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தின் முக்கிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)

03. 1. பிரித்தானியர் இலங்கைக்கு வருகை தந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. 1818ம் ஆண்டு போராட்டத்தை முன்னெடுத்த நான்கு தலைவர்களைக் குறிப்பிடுக.
3. 1818ம் ஆண்டு கலகம் தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)

04. 1. பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றைக் குறிப்பிடுக.
2. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்திக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. இலங்கையில் தேயிலை பயிர்ச்செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)

05. 1. இலங்கையில் செயற்பட்ட மிஷனரி அமைப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. மிஷனரி அமைப்புக்கள் தமது சமயத்தை துரிதமாகப் பரப்புவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் அவர்களால் ஆற்றப்பட்ட பணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)

06. 1. சிப்பாய்க் கலகம் என்றால் என்ன?
2. சிப்பாய் கலகம் ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. சிப்பாய்க் கலகம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)

07. 1. இந்திய தேசிய சங்கத்தின் தலைமைப் பதவிகளை வகித்தவர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.
2. இந்திய தேசிய சங்கத்தின் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு மகாத்மாகாந்தி முன்னெடுத்த செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5=12புள்ளிகள்)